17.03.2025
அசல் வழக்கு எண்: 245/2014

பி.வா.சா.1 சாட்சி சசிக்குமார் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

சுப்பாரெட்டியார் மற்றும் சொக்கமாள் தம்பதியாருக்கு பசுபதியம்மாள், லிங்கம்மாள், லெட்சுமியம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். பசுபதியம்மாள் ராமசாமிரெட்டியாருக்கு வாக்கப்பட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பசுபதியம்மாள் ராமசாமிரெட்டியாருக்கு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். லிங்கம்மாள் வெங்கடசாமிரெட்டியாருக்கு சீனிவாசன் மற்றும் ராமநாதன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். சீனிவாசன் என்பவருக்குதான் ராம்குமார், சிவக்குமார், மணிகண்டன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். ராமநாதன் என்பவருக்கு நடராஜன், தனலெட்சுமி, சசிக்குமார் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.

லெட்சுமியம்மாள் சொக்கப்பரெட்டியார் ஆகியோர்களுக்கு கோபாலகிருஷ்ணன் மற்றும் சுப்புலெட்சுமி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு ராதாகிருஷ்ணன், சுப்பாரெட்டி, பாலகிருஷ்ணன், சுப்புராஜ், பசுபதி மற்றும் சுந்தரராஜன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். பசுபதி என்பவரை கலாவதி என்று கூப்பிடுவார்கள்.

பசுபதியம்மாள், லிங்கம்மாள், லெட்சுமியம்மாள் ஆகியோர்களின் தகப்பனார் சுப்பாரெட்டி என்பவர் சித்திவிநாயகர் கோவிலை நிர்மானித்து அதனை பராமரிப்பதற்காக 1936ம் ஆண்டு சில சொத்துக்களை கோவிலுக்கு தான செட்டில்மெண்டாக எழுதி வைத்தார் என்றால் கேள்விப்பட்டிருக்கிறேன். மேற்படி 1936ம் ஆண்டின் தான

செட்டில்மெண்டு ஆவணத்திலேயே மேற்படி விநாயகர் கோவிலை ஸ்தாபிப்பதனால் எனக்கும் எனது வாரிசு பிரதிநிதிகளுக்கும் நல்ல சுகமும், தேக ஆரோக்கியமும், திடகாத்திரமும், ஆத்ம மோட்சமும் அடையும் பொறுட்டு இவைகளை உத்தேசித்து என்கண் உள்ளபோதே ஒருவிதமான ரெக்காடு செய்து வைக்கவேண்டும் என்று அதை இப்போது பூர்த்தி செய்து மேற்படி கைங்கரியங்களை வகையராக்களை நானும் எனது வாரிசுகளும் நடத்தி வரவேண்டிய காரியாதிகளுக்காக பொருள் ஒத்தாசை வேண்டிய அவசியத்தை முன்னிட்டு எனக்கு சுயாஜிதமாய் சம்பாதிக்கப்பட்ட இதன் தபசில் கண்ட சொத்துக்களை நான் இந்த செட்டில்மெண்டு தஸ்வேஜ் மூலமாக எழுதி வைக்கிறேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தான செட்டில்மெண்டு ஆவணத்தின் மூலமாக 7 இலக்க சொத்துக்களை மேற்படி சித்தி விநாயகர் கோவிலுக்கு தானமாக எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுப்பாரெட்டியார் 1940ம் ஆண்டு ஆணவ எண். 2481/1940 ன் படி 2 இலக்க சொத்துக்களை மேற்படி சித்தி விநாயகர் கோவிலுக்கு தானமாக எழுதிகொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி 2 ஆவணங்களில் கட்டுப்பட்ட சொத்துக்களை வில்லங்கம் செய்வதற்கு யாருக்கும் உரிமையில்லை என்று மேற்படி ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்துக்களின் கிடைக்கும் வருமானத்தை சித்தி விநாயகர் கோவிலுக்கு மட்டுமே செலவளிக்கவேண்டும் என்று மேற்படி ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்துக்களில் கிடைக்கும் வருமானத்தில் பராமரிப்பு

செலவு போக மீதமிருக்கும் பணத்தை வைத்து கோவில் அமைந்துள்ள பகுதியில் கிணறு வெட்டவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிணறு வெட்டி அதன் தண்ணீரை பயன்படுத்தி கோவிலுக்கு கைங்கரியம் செய்யும் புஸ்பங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் சுப்பாரெட்டியாரின் வாரிசுகள் மட்டுமே சாமி கும்பிடவேண்டும் என்றும் வெளி நபர்கள், அந்த ஊரை சேர்ந்தவர்கள் சாமி கும்பிடவோ, வழிபாடு செய்யவோ உரிமையில்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

1981 ம் ஆண்டு ராமநாதன் மற்றும் சீனிவாசன் ஆகியோர்கள் மேற்படி கோவில் பொது கோவில் என்று பிரஸ்தாபம் செய்து வந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இருவரும் அவ்வாறு பிரஸ்தாபம் செய்ததால் பசுபதியம்மாள் மற்றும் லெட்சுமியம்மாள் இந்து சமய அறநிலயத்துறை துணை ஆணையரிடம் மேற்படி கோவில் தனியாருக்கு பாத்தியப்பட்ட கோவில் என்றும் பொது கோவில் கிடையாது என்றும் விளம்புகை கேட்டு மனுதாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனுவில் மேற்படி கோவில் தனியாருக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1936ம் ஆண்டின் தான செட்டில்மெண்டு ஆவணத்தின் அடிப்படையிலும், இந்து சமய அறநிலயத்துறை ஆய்வாளரின் அறிக்கையின் அடிப்படையிலும் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1936ம் ஆண்டின் தான செட்டில்மெண்டு ஆவணத்தில் மேற்படி கோவிலை தனக்கு பிறகு யார்ரெல்லாம் நிர்வாகம் செய்யவேண்டும் என்று

சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1936 மற்றும் 1940 ம் ஆண்டின் தான செட்டில்மெண்டு ஆவணங்களில் கண்ட விபரங்களுக்கு எதிராகத்தான் தாவா டிரஸ்ட் பத்திரத்தை 2013 ம் ஆண்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1940 ஆண்டின் செட்டில்மெண்டு ஆவணத்தில் மேற்படி சொத்துக்களை எவ்வாறு பயன்படுத்தப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பது மாறாக டிரஸ்ட் பத்திரம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி பி.வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)